

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள், நன்றி அறிவிப்பு பொதுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் புலவர்சே. செவந்தியப்பன், மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் மற்றும் நிர்வாகிகள் உள்ளார்கள்.

## சிவகங்கை நகராட்சி ஆணையர் இருக்கையில் அமர்ந்த த.வெ.க. எம்.எல்.ஏ.!



சிவகங்கை நகராட்சியில் நகராட்சி ஆணையர் இருக்கையில் அமர்ந்து சிவகங்கை த.வெ.க. எம்.எல்.ஏ குழந்தைராணி ஆய்வு செய்தார். . இதனால் நகராட்சி ஊழியர்கள் கடும் அதிருப்தி அடைந்தனர்.

### கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத த.வெ.க. அரசு!

# ஏக்கத்தில் உயிர்விட்ட விவசாயி சோமசுந்தரம் - விவசாயிகளின் உயிர்பலியை நிறுத்த அரசு முன்வரவேண்டும்!

## கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் கண்டனம்!

சென்னை, ஜூலை 8-

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத தவெக அரசு என்றும் ஏக்கத்தில் உயிர்விட்ட விவசாயி சோமசுந்தரம் - விவசாயிகளின் உயிர்பலியை நிறுத்த அரசு முன்வர வேண்டும் என்றும், கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நாகப்பட்டினம் தலைஞாயிறை அடுத்த பிரிஞ்சிமுளை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சோமசுந்தரம் கூட்டுறவு வங்கியில் தமது நிலத்தை அடகு வைத்து 85 ஆயிரம் ரூபாய்க் கடன் வாங்கியிருந்தார். பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக இரண்டு முறை விஜய் அரசு அறிவிப்பு வெளியிட்டும் 75 ஆயிரம் ரூபாய் வரையிலான கடன்கள் மட்டுமே முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட்டன. இதனால் வாங்கிய கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படாததால் சோமசுந்தரம் மன உளைச்சலில் இருந்தார்.

பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வலியுறுத்தி சென்னையில் 4ஆம் தேதி நடந்த விவசாயிகள் அமைப்புகள் நடத்திய போராட்டத்தில் பங்கேற்று வீடு திரும்பியதுமே மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

"5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கி பயிர்க் கடன் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும். "5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகளின் கூட்டுறவு வங்கி பயிர்க்கடன் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படும்" என்று தேர்தல் பிரச்சாரத்தில் திருப்பூரில் 2026 ஏப்ரல் 14 ஆம் தேதி வாக்குறுதி கொடுத்தார் விஜய். இதே அறிவிப்பை தவெக தேர்தல் அறிக்கையிலும் வெளியிட்டார்கள்.

தனது பிரச்சாரத்தில் பச்சைத் துண்டு அணிந்து விவசாயிகளை ஏமாற்றி, ஆட்சிக்கு வந்த விஜய் விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றவில்லை.

தேர்தல் வாக்குறுதியில் 'நிலத்தின் பரப்பளவை அடிப்படையாகக் கொண்டே தள்ளுபடி அமையும்' என வாய் கிழியப் பேசிய விஜய், ஆட்சிக்கு வந்த பிறகு நிலத்தின் பரப்பளவைக் கணக்கில் கொள்ளாமல் கடன் தொகையின் அளவை அடிப்படையாக வைத்து அறிவிப்பை வெளியிட்டார். 50 ஆயிரம் ரூபாய் வரை கடன் பெற்ற குறு விவசாயிகளுக்கு மட்டுமே முழுத் தள்ளுபடி அளிக்கப்பட்டது. கடன் தொகை 50 ஆயிரத்திற்கு மேல் போகும்போது தள்ளுபடித் தொகை பெருமளவு குறைக்கப்பட்டது.

இந்த ஏமாற்றத்தைப் பொறுக்க முடியாமல் விவசாயிகள் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தினார்கள். இதனால், 75 ஆயிரம் வரையிலான பயிர்க் கடன், 100 சதவிகிதம் தள்ளுபடி எனவும் 75 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடன் பெற்ற விவசாயிகளுக்கு 35 ஆயிரம் ரூபாய் வரை பயிர்க் கடன் தள்ளுபடி எனவும் முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டார். இந்த அறிவிப்பினாலும் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கவில்லை.

2006ஆம் ஆண்டு திமுக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் முதலமைச்சராகக் கலைஞர் பதவியேற்ற அன்றே அனைத்து விவசாயிகளுக்குமான 7,000 கோடி ரூபாய் கூட்டுறவு பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கான கோப்பில் முதல் கையெழுத்திட்டார். 2021ல் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு சுமார் 12,000 ஆயிரம் கோடிக்கும் அதிகமான கூட்டுறவு பயிர்க்கடன்களைத் திமுக அரசு முழுமையாகத் தள்ளுபடி செய்து விவசாயிகளுக்குச் சான்றிதழ்களை வழங்கியது.

இந்த நடைமுறைகள் எதையும் விஜய் அரசு பின்பற்றவில்லை. இந்த அநியாயத்தை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் போராட்டம் நடத்திய போது "ரிசர்வ் வங்கியின் புதிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி நிபந்தனைகள் விதிக்க ப்பட்டது" என வியாக்கியானம் கொடுத்தார்கள். ரிசர்வ் வங்கியின் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் 2025 நவம்பர் 28 அன்று வெளியிடப்பட்டன. அதற்கு பிறகுதான் விஜய் வாக்குறுதி கொடுத்தார். அப்போது பனையூரில் பஞ்சு மெத்தையில் படுத்திருந்த விஜய்க்கு தெரியாதா? ஆட்சிக்கு வந்து பிறகுதான் ரிசர்வ் வங்கி என்று ஒன்று இந்தியாவில் இருப்பது தெரிய வந்ததா?

பயிர்க் கடன் தள்ளுபடி அறிவிப்பு வெளியான அதே காலகட்டத்தில் தான் மகாராஷ்டிராவில் 55.72 லட்சம் விவசாயிகள் வாங்கிய. 36,585 கோடி ரூபாய் பயிர்க் கடன்களை மகாராஷ்டிரா அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. மகாராஷ்டிராவில் தள்ளுபடி செய்ய முடியும். தமிழ்நாட்டில் முடியாதா?

தேர்தல் வாக்குறுதிப்படி முழுமையாகக் கடன் தள்ளுபடி செய்யவில்லை. அந்த வாக்குறுதி நிறைவேற்றினால்தான் அனைத்து விவசாயிகளுக்கும் பலன் கிடைக்கும்.

கடனை நிபந்தனைகள் இன்றி முழுவதும் நீக்கிய பெருமை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களையும் , திராவிட மாடல் அரசின் பிதாமகர் தளபதி அவர்களையுமே சாரும். ஆனால் தவெக அரசோ விவசாயிகளின் வாக்குகளைப் பெறுவதற்கு வஞ்சகமாக ஏமாற்றி அவர்களை வஞ்சித்துவிட்டது.

சோமசுந்தரம் போல லட்சக்கணக்கான விவசாயிகள் கடன் சுமையால் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கும் சூழலில் மேட்டூரிலிருந்து காவிரி நீர் திறந்து விடப்படாததால் குறுவை சாகுபடி பொய்த்து மேலும் மன உளைச்சலுக்கு விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தேர்தல் அறிக்கையில் சொன்னபடி முழுமையான கடன் தள்ளுபடியை விஜய் அரசு செய்ய வேண்டும். இறந்த விவசாயி சோமசுந்தரம் குடும்பத்திற்கு 50 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும்.

விவசாயிகளை ஏமாற்றிய ஆட்சியாளர்கள் நீடித்து நிலைத்ததில்லை என்பதே வரலாறு.

இவ்வாறு அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**கெஞ்சுவதில்லை**

**பிறர்பால்**

**அவர் செய் கேட்டினுக்கும்**

**அஞ்சுவதில்லை**

**மொழியையும் நாட்டையும் ஆளாமல்**

**துஞ்சுவதில்லை**

**எனவே**

**தமிழர் தோள் எழுந்தால்**

**எஞ்சுவதில்லை உலகில்**

**எவரும் எதிர் நின்றே !**



**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

### கொளத்தூர் கிழக்குப் பகுதி - 68 (அ) வட்டக் கழகச் செயலாளர்

# பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் இல்லத் திருமண விழா: பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை!

## ஆர்.எஸ்.பாரதி - சா.சி.சிவசங்கர் - எஸ்.ஜெகத்ரட்சகன் - கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் - ப.ரங்கநாதன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 8 –

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர் கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்குப் பகுதி, 68 (அ) வட்டக் கழகச் செயலாளரும், மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவர் பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் – எஸ்.ஆனந்தி ஆகியோரின் புதல்வர் டாக்டர் எஸ்.சபரிவாசனுக்கும், மதுரை மாவட்டம், கோ. வீரபத்திரன் – கோ.பார்வதி (எ) பவானி ஆகியோரின் புதல்வி டாக்டர் வி. கார்த்திகாராஜம் ஆகியோரின் திருமண வரவேற்பு விழா 11.07.2026 – சனிக்கிழமை, மாலை 6.30 மணிக்கு, மண விழா 12.07.2026 – ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணிக்கு மேல், சென்னை, ஜி.கே.எம்.காலனி, பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெறுகிறது.



சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக சட்டத் திருத்தக் குழுச் செயலாளர் இரா. கிரிராஜன் எம்.பி, தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி. எப்.வ.முரளிதரன், கொளத்தூர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, தேவஜவகர், சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ, பா.தாயகம் கவி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ., பி.வில்சன் எம்.பி, முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, மேயர் பிரியா ராஜன், மாதவரம் எஸ்.சுதர்சனம், நே.சிற்றரசு எம்.சி, பி.டி.சி.செல்வராஜ், ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜி.சீனிவாசன், ஆர்.மோகனகிருஷ்ணன், ஆர்.செல்வராஜ் (எ) பாபு, பி.சுதர்சன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதி, சோழவரம் தெற்கு ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட குமரன் நகர் கிளை கழக இளைஞர் அணி அமைப்பாளர் வி.சூர்யாபிரகாஷ் இல்ல விழாவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் கலந்துகொண்டு வாழ்த்தினார். உடன் இளைஞர் அணி அமைப்பாளர்கள் சோழவரம் எஸ்.ஜெகன், புழல் செ.யுவராஜ், மணலி எஸ்.ஸ்டாலின், துணை அமைப்பாளர்கள் காரனோடை விஜய், ரெட்ஹில்ஸ் எம்.எஸ்.மணிகண்டன், டேவிட், ம.குறளரசன், அ.மணிமாறன், புழல் சித்தர், சீ.நித்தியானந்தம், சீ.ஹரிஷ், ஜென்னிஸ், ஆர்.விக்னேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் இனைந்து பங்கேற்று மழலை செல்வங்களை வாழ்த்தினர்.

### திருப்பூர் மாவட்டம் - தாராபுரம் - குண்டடம் பகுதியில்

# 50 ஆண்டுகள் பழமையான நெடுஞ்சாலையோர மரங்கள் வெட்டி கடத்தல்?

## நடவடிக்கை எடுக்காத வனத்துறை!


திருப்பூர், ஜூலை 8-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மற்றும் குண்டடம் பகுதியில் 50 ஆண்டுகள் பழமையான நெடுஞ்சாலையோர மரங்கள் திட்டமிட்டு அழிக்கப் பட்டு வருவதால் இயற்கை ஆர்வலர்கள் வேதனையில் உள்ளனர்.

கடந்த 2 வருடங்களுக்கு முன்பாக கோவை தாராபுரம் சாலையில் பல்லடம் முதல் குண்டடம் அடுத்துள்ள திருப்பூர் பிரிவு வரை உள்ள சாலை 4 வழிப்பாதையாக மாற்றப்பட்டது. சாலை விரிவாக்க பணிகளின் போது சாலையோரங்களில் இருந்த ஏராளமான மரங்கள் வெட்டி அகற்றப்பட்டன. சாலை போடும் பணிகள் நிறைவடைந்த பிறகு சாலைகளின் இருபுறங்களிலும் வேம்பு, நாவல், அத்தி, புங்கன், கொன்றை உள்ளிட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்த நிலையில், குண்டடம் பகுதியில் மட்டும் நூற்றுக்கணக்கான மரக்கன்றுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. தாராபுரம் பொள்ளாச்சி சாலையில் 50 ஆண்டுகள் பழமையான மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டுள்ளன. காற்றாலை மற்றும் சூரிய ஒளி தகடுகள் மூலம் தயாரிக்கப்படும் மின் சாரத்தை வேறு பகுதிக்கு கொண்டு செல்கிறோம் எனக் கூறி உயர்மின் கம்பங்களை அமைத்து மின் கம்பிகள் செல்லும் பகுதியில் உள்ள அனைத்து மரங்களும் வெட்டி வீசப்படு கின்றன.

மரங்களை வெட்டி அதனை திருப்பூர், கோவையில் உள்ள சாயப்பட்டறை, ஸ்டீம் பாய்லர் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கும் அரசு தடை விதித்துள்ள நிலையில் தாராபுரம் பகுதியில் இருந்து மட்டும் தினமும் மரங்கள் வெட்டி எடுத்துச்சென்று விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மரங்கள் அழிக்கப்படுவது தொடர்பாக எந்த விதமான விசாரணையும் இதுவரை நடந்ததாக தெரியவில்லை.

## 41 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**ஆம்பூர் ஆர். சம்பங்கி**

(முன்னாள் எம்.எல்.ஏ., முன்னாள் நகர சபைத் தலைவர்)

**வணங்குகிறோம், வாழ்த்திடுங்கள்!**

**தர்மமே, எங்கள் தந்தையே,**
**அண்ணாவின் அடிச்சுவட்டை வாழ்வில்**
**உன் வழியாய்க் கொண்டவரே,**
**பொன் கழகம் புவி சிறக்க – கலைஞர்**
**புனிதரோடிணைந்தவரே**
**விண் உதிக்கும் சூரியனாய் – கொள்கை**
**உயிர் முழக்கம் செய்தவரே**
**கண்மூடும் நாள் வரைக்கும் – கழகக்**
**கண்மணியாய் இருந்தவரே**
**துன்பங்கள் சூழுகையில் – அதனை**
**துச்சமென உமிழ்ந்தவரே**
**இன்று வானிலிருந்து வாழ்த்து மழை – எங்கள்**
**இதயத்தில் பொழிபவரே**
**என்றும் நல்வழியில் நாம் நடத்தும் கழகம்**
**காத்திட வாழ்த்திடுங்கள்**

மகன்கள் : (லேட்) **ஆர்.எஸ்.மனோகர்** குடும்பத்தினர்
**ஆர்.எஸ். ஆனந்தன்** எக்ஸ் எம்.சி.,
திருப்பத்தூர் மாவட்டக் கழக அவைத் தலைவர்,
**ஆர்.எஸ்.ராஜு** பி.காம்.,
மகள் : **ஆர்.எஸ்.சாந்தி** மற்றும் மருமகள்கள், மருமகன்
பேரன், பேத்திகள், குடும்பத்தினர்.



திரு.வி.க.நகர் வடக்கு பகுதி கழக துணைச்செயலாளர் புல்லட் ரமேஷ் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழாவில் கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் மு.சரவணன், பகுதி அவைத்தலைவர் தில்லைக்கதிரவன்,மாவட்ட தகவல் தொழில் நுட்ப துணை அமைப்பாளர் சிவகுமார், மாவட்ட பிரிதிநிதிகள் முகவை அண்ணாதுரை, ஆட்டோராஜி, 71–வது வட்ட துணை செயலாளர் பாலாஜி பகுதி பிரிதிநிதி துரை. பிரகாசம். 73–வது வட்ட துணைச்செயலாளர் சுரேன், பெரம்பூர் தம்பையா ஆகியோர் உடனிருந்தனர்.